**<u>District Munsif-cum-Judicial Magistrate Court, Kadaladi</u>.**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
<u>CC.No.200/2019</u>

Name : திருமதி.பஞ்சவர்ணம்
Rank of the witness : PW 1
Husband/Father Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

A2, A4 present. A1, A3 absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 12.10.2023.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மேலக்கிடாரம் கிராமத்தில் குடியிருந்து பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும்.

2. கடந்த 05.07.2017 ம் தேதி எனது முஸ்தப்பா மனைவி பஞ்சவர்ணம் என்பவர் ஊரில் இறந்து விட்டார். அடக்கம் செய்வதற்காக எனது வீட்டு வழியாக கொண்டு வந்தார்கள். அடக்கம் செய்யும்போது குடம் உடைக்கும் சாஸ்திரம் நடைபெற்றது.

3. பொதுவாக ஊரில் சாலையில்தான் நடக்கும். அன்று எனது வீட்டின் முன்பாக குடம் உடைத்தார்கள். நான் பொதுவாக வழக்கம்போல் ரோட்டில் போட்டு உடையுங்கள் என்று சொன்னேன்.

4. சத்தியமூர்த்தி, தர்மலிங்கம், சத்தியமூர்த்தி மனைவி லெட்சுமி, சாந்தி ஆகியோர் ஓடிவந்து என்னை கீழே இழுத்து போட்டு கையால் அடித்தார்கள். கல்லால் எறிந்தார்கள். எனக்கு உடம்பெல்லாம் காயம்பட்டது. சம்பவ இடத்தில் எனக்கு அவமானம் ஏற்பட்டது.

5. சம்பவ இடத்தில் சுமார் 60 நபர்களுக்கு மேல் இருந்தார்கள். அவர்கள் யாரும் கண்டுகொள்ளவில்லை. எனது கணவரும், நாத்தனாரும் வந்து சண்டையை விலக்கி விட்டார்கள். நான் முதலில் காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்து

போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

6. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. நான் மருத்துவமனை செல்லும்போது இரவு சுமார் 7 மணி இருக்கும். நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கும்போது மதியம் 03.30 மணி இருக்கும். இறந்தவர் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் மறவர் இனத்தை சேர்ந்தவர்.

2. எங்கள் கிராமத்தில் இரண்டு ஜாதிகாரர்களும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம். எங்களுக்கும், எதிரிகள் வகையறாவிற்கும் தனித்தனி சுடுகாடு உள்ளது. குடம் உடைத்தது எனது சொந்த இடமாகும். தெரு முனை இல்லை. புகாரில் இந்த விபரத்தை குறிப்பிட்டுள்ளேன். சர்வே எண் குறிப்பிடவில்லை.

3. இறந்த பஞ்சவர்ணத்தின் உடலை எனது தெருவின் வழியில் எடுத்துச் செல்ல விடாமல் தடுத்து ஜாதி பெயரை சொல்லி திட்டியதால் இராமநாதபுரத்தில் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். கல்லை எறிந்து கம்பால் அடித்த விபரத்தை புகாரில் குறிப்பிட்டுள்ளேன். புகாரை என் கணவர் எழுதி கொடுத்தார்.

4. எனது வீட்டிற்கும் குடம் உடைக்கும் இடத்திற்கும் சுமார் 500 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்களை எடுத்துச்செல்லும் போது தெரு முனையில் குடம் உடைப்பது வழக்கம்.

5. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

6. எதிரிகள் புகார் அளித்த பின்பு நான் எதிரிகள் மீது புகார் அளித்தேன் என்றால் சரிதான். எதிரிகள் அளித்த புகாரில் இருந்து தப்பிக்க நான் பொய்யாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.